இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 25-11-2025

# அலுவலர்களே எதிர்க்கிறார்கள்!

**தீ**விர சிறப்பு வாக்காளர் திருத்தப் பணிகளை அரசியல் ரீதியாக அரசியல் கட்சிகள் மட்டும் எதிர்க்கவில்லை. அரசு அலுவலர்களே இந்தியாவின் பல மாநிலங்களில் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

S.I.R. **பணிச்சுமை காரணமாக மத்தியப்பிரதேசத்தில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர் தற்கொலை செய்துள்ளார்.** BLO **அலுவலராக பணியாற்றிய உதயபானு சிகாரே என்கிற பள்ளி ஆசிரியர், பணிச்சுமை காரணமாக தற்கொலை செய்து கொண்டுள்ளார்.**

S.I.R **பணிச்சுமை காரணமாக கேரளாவில் கண்ணூர் மாவட்டம் காங்கோல் ஆலப்படம்பா பஞ்சாயத்தைச் சேர்ந்த அனீஷ் ஜார்ஜ் தற்கொலை செய்துள்ளார்.** 'என் மகன் அதிகாலை வரைக்கும் வேலை பார்த்து கஷ்டப்பட்டான்.பணி அழுத்தம் காரணமாக வேலையில் இருந்து விடுவிக்கக் கோரி மூன்று முறை விண்ணப்பம் செய்தான். இறப்புக்கு முந்தைய நாள் நள்ளிரவு 1.30 மணி வரைக்கும் வேலை பார்த்தான்' என்று ஜார்ஜின் தந்தை சொல்லி இருக்கிறார். இதனைத் தொடர்ந்து கேரள மாநில அரசு ஊழியர்கள் போராட்டம் நடத்தினார்கள். உள்ளாட்சித் தேர்தல் வரைக்கும் இந்தப் பணிகளை நிறுத்தி வைக்க அவர்கள் கோரிக்கை வைத்தார்கள்.

ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர்கள் 2 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். **ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலராக நியமிக்கப்பட்ட அரசு பள்ளி ஆசிரியர் முகேஷ் ஜாங்கிட் என்பவர் ரயில் முன்பு குதித்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.** தன்னை விட மூத்த அதிகாரி, தன்னை மிரட்டியதாக முகேஷ் சொல்லி இருந்தாராம்.

**மேற்கு வங்கத்தில் எஸ்.ஐ.ஆர். பணியால் ஏற்பட்ட பணிச்சுமையின் காரணமாக பி.எல்.ஓ. அதிகாரி தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகி உள்ளது.** தனது தற்கொலைக்கு தேர்தல் ஆணையமே காரணம் எனக்கூறி கடிதம் எழுதி வைத்துவிட்டு ரிங்கு தரத்தார் என்பவர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. மேற்கு வங்கத்தின் கிருஷ்ணா நகரில் பள்ளி ஆசிரியராக பணியாற்றி வந்தார் அவர்.

தினமும் 100 வீடுகளுக்கு சென்று விண்ணப்பங்களை வழங்க வேண்டும் என்று தேர்தல் ஆணையம் அழுத்தம் கொடுப்பதாக ராஜஸ்தான் மாநில அரசு பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு புகார் தெரிவித்துள்ளது.

ராஜஸ்தானில் வாக்காளர் பட்டியல் பெயர் சேர்ப்பு அலுவலர் தற்கொலையை தொடர்ந்து ஆசிரியர் சங்கத்தினர் போராட்டம் நடத்தினர்.

அதீதமான பணி நெருக்கடிகளைக் களைந்திட வலியுறுத்தி வருவாய்த் துறை சங்கங்களின் கூட்டமைப்பு வெளியிட்ட அறிக்கையில், **"தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்த பணிகளில் (S.I.R.) உரிய திட்டமிடுதலை தேர்தல் ஆணையம் செய்யவில்லை"** என்று சொல்லி இருக்கிறார்கள்.

★ வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிக்கு உரிய கால அவகாசம் வழங்கிட வேண்டும். அனைத்து வாக்குச் சாவடி நிலை அலுவலர் (BLO), கண்காணிப்பாளர் உள்ளிட்ட அனைத்து நிலை அலுவலர்களுக்கும் உரிய பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.

★ வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளை முழுமையாக பிழைகள் இன்றி மேற்கொள்ள கூடுதல் பணியாளர்களை நியமனம் செய்திட வேண்டும். வாக்குச்சாவடி நிலை அலுவலர் (BLO), கண்காணிப்பாளர் நிலைகளில் போதிய தன் ஆர்வலர்கள்/ அரசு பணியாளர்களை உடன் நியமனம் செய்திட வேண்டும் – என்று இவர்கள் கோரிக்கை வைத்தார்கள். இதன் மூலம் தெரிவது என்ன?

**அவசர கதியில் ஏதோ ஒன்றைச் செய்ய நினைக்கிறது தேர்தல் ஆணையம். அனைத்தையும் ஒரே மாதத்தில் முடிக்க உத்தரவிட்டுள்ளது தேர்தல் ஆணையம். வீடுவீடாகச் சென்று படிவங்களை வழங்குவது, அவற்றை பூர்த்தி செய்து வாங்குவது, வாங்கிய படிவங்களை இணையத்தில் பதிவு செய்வது என்ற பணிகளுக்காக ஒரு மாத கால அவகாசமே தேர்தல் ஆணையம் வழங்கி உள்ளது. இந்த கால அவகாசத்தைத்தான் அவசர கதி என்று சொல்கிறோம். இது வெளி மாநிலங்களில் அலுவலர்கள் சிலரை தற்கொலை வரைக்கும் தள்ளி இருக்கிறது.**

அகில இந்திய அளவில் ஒரே நேரத்தில் செய்ய வேண்டிய அவசியம் என்ன? நீண்டகால அவகாசம் எடுத்து நடத்தப்பட வேண்டிய SIR எனும் பணியை அவசர அவசரமாக நடத்த வேண்டிய தேவை என்ன? தேர்தல் ஆணையம் பகுதி பகுதியாகச் செய்ய வேண்டிய பணியை ஒட்டுமொத்தமாக அரசு ஊழியர்கள் அனைவரையும் குத்தகைக்கு எடுத்து செய்ய வேண்டியது ஏன்? அனைத்துக்கும் பின்னாலும் ஒரு சதி இருக்கிறது. அதுதான் பா.ஜ.க.வின் அரசியல் திட்டங்களுக்கு வழிவகை செய்வது ஆகும்.

**குடியுரிமைச் சட்டத் திருத்தத்தை, சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தல் பட்டியல் தயாரிப்பு என்ற பெயரில் நடத்த நினைக்கிறார்கள். ஊடுருவல்காரர்களை நீக்குவதாக மற்ற மாநிலத்தில் பேசுபவர்கள், இங்கு சிலரை புகுத்த நினைக்கிறார்கள். பெரும்பான்மை மக்களை வாக்குரிமை அற்றவர்களாக ஆக்க நினைக்கிறார்கள். இந்த சதியை அரசியல் அமைப்புகள் மட்டுமல்ல, அலுவலர்கள் அனைவரும் உணர்ந்து எதிர்க்கிறார்கள். மக்கள் அனைவரது எதிர்ப்புக்கும் உள்ளாகி இருக்கிறது தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைகள்.**

**தங்களுக்குள்ள அதிகாரத்தை அவர்கள் தவறாகப் பயன்படுத்தலாம். ஆனால் மக்கள் சரியான பாடத்தையே கொடுப்பார்கள்.**

## கோவை – ஈரோடு மாவட்டங்களில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு!

## செம்மொழிப் பூங்கா மற்றும் மாவீரன் பொல்லான் சிலையைத் திறந்து வைக்கிறார்!

**சென்னை, நவ. 25 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கள ஆய்வுப் பணிகளுக்காக கோவை, ஈரோடு ஆகிய மாவட்டங்களில் 25.11.2025, 26.11.2025 ஆகிய இரண்டு நாள்கள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார்.**

கோயம்புத்தூரில் 2010ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், செம்மொழிப் பூங்கா அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள். அந்த அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 18.12.2023 அன்று கோவையில் செம்மொழிப் பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டி, பணிகளைத் தொடங்கி வைத்தார்.

அப்பணிகள் அனைத்தும் நிறைவுற்ற நிலையில், இன்று (25.11.2025) காலை, உலகத்தரத்தில் பல்வேறு நவீன வசதி களுடன் 45 ஏக்கர் பரப்பளவில், ரூ.208.50 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள கோவை செம்மொழிப் பூங்காவினை முதலமைச்சர் அவர்கள் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கிறார்.

**TNRise கோவையில் முதலீட்டாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் நிகழ்ச்சி!**

அதனைத் தொடர்ந்து, அன்று மாலையில் தொழில் துறை சார்பில் நடைபெறும் "TNRise" நிகழ்ச்சியில், முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில், பல்வேறு தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மாவீரன் பொல்லான் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் திறப்பு!**

இரண்டாம் நாளான 26.11.2025 அன்று காலை 10.00 மணியளவில் ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி ஜெயராமபுரத்தில், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைக்கிறார்.

மாவீரன் பொல்லான் பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயரின் அத்துமீறலுக்கு எதிராகப் போர்புரிந்த தீரன் சின்ன மலையின் போர்ப்படையிலும், ஒற்றர் படையிலும் தளபதியாகத் திகழ்ந்தவர்.

ஈரோடு மாவட்டம் அரச்சலூர் அருகே உள்ள நல்லமங்காபாளையம் கிராமத்தில் பிறந்த பொல்லான், சிறுவயதிலிருந்து வாள், வில், மற்போரில் சிறந்த முறையில் பயிற்சிகள் பெற்றார். தீரன் சின்னமலை, வெள்ளையர் படையை எதிர்த்து 1801 இல் நடைபெற்ற பவானிப்போர், 1802இல் நடைபெற்ற ஓடாநிலைப் போர், 1,803 இல் நடைபெற்ற அரச்சலூர் போர் ஆகிய மூன்று போர்களிலும் பெற்ற வெற்றிகளுக்கு மூலகாரணமாகத் திகழ்ந்தவர் மாவீரன் பொல்லான்.

அதனால், சினம் கொண்ட ஆங்கிலேயப் படைத்தளபதி கர்னல் ஹாரிஸ் வீரர்களால், ஓடாநிலை கோட்டைக்கு அருகில் ஜெயராமபுரத்தில் மாவீரன் பொல்லான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மாவீரன் பொல்லான் அவர்களது வீரத்தை போற்றும் வகையில் ஜெயராமபுரத்தில் முழு உருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டித்தருமாறு, பொல்லான் வீர வரலாறு மீட்புக் குழு பல ஆண்டுகளாக விடுத்த கோரிக்கையை ஏற்று, திராவிட மாடல் அரசு 4.90 கோடி ரூபாய் மதிப்பில் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி ஜெய ராமபுரத்தில் அமைத்துள்ள அவரது முழு உருவச் சிலையுடன் கூடிய அரங்கத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.11.2025 காலை 10.00 மணியளவில் திறந்து வைக்கிறார்.

**சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை திருவுருவச்சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல்!**

தொடர்ச்சியாக, ஓடாநிலையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை மணிமண்டப வளாகத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

**ஈரோடு மாவட்ட அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா!**

அதனைத் தொடர்ந்து, ஈரோடு, சோலார் புதிய பேருந்து நிலையத்தில் நடைபெறவுள்ள அரசு விழாவில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ரூ.605 கோடி மதிப்பிலான முடிவுற்ற திட்டப்பணிகளைத் திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,84,491 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்.

**பால்வளத் தந்தை சி.கு.பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 20.12.2024 அன்று ஈரோடு மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், "சின்னியம்பாளையத்தில் பிறந்து நாட்டு விடுதலைக்காக பாடுபட்டதோடு, தன்னுடைய அயலாத முயற்சிகளால் பால் உற்பத்திகளைப் பெருக்கி, தமிழ்நாட்டில் வெண்மைப் புரட்சிக்கு வித்திட்ட பால்வளத் தந்தை சி.கு.பரமசிவம் அய்யா அவர்களின்திருவுருவச் சிலை ஈரோடு பால்பண்ணையில் நிறுவப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

கொங்கு மண்டலத்தின் பெருமையாகத் திகழ்ந்த சி.கு.பரமசிவன் 'பசுமை நிலம், வெண்மைப் பால்' என்ற கனவைக் கொண்டு நூற்றுக்கணக்கான பசுமாடு வளர்ப்பாளர்களை ஒன்றிணைத்து, தமிழ் நாட்டிற்குப் புதிய பொருளாதாரக் களத்தை உருவாக்கினார். விவசாயக் குடும்பங்களின் வருவாயை உயர்த்தவும், பால் விநியோக முறையை நவீனப்படுத்தவும், பால்வளத் துறையைத் தொழில்மயமாக்கவும் அர்ப்பணிப்புடன் செயல்பட்டவர்.

தமிழ்நாடு அரசின் ஆவின் நிறுவனம், கூட்டுறவு பால் சங்கங்கள், பால் செயலாக்கக் கட்டமைப்புகள் அனைத்தும் அவர் விதைத்த விதையின் செழிப்பான விளைவுகளாகும். அதனால் அவர் பால்வளத் தந்தை என அழைக்கப்படுகிறார்.

அத்தகைய பெரும் ஆளுமைக்கு நன்றி செலுத்தும் வண்ணம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஈரோடு சித்தோடு ஆவின் பால்பண்ணை வளாகத்தில், ரூ.50 இலட்சம் செலவில் பால்வளத் தந்தை சி.கு.பரமசிவன் அவர்களின் திருவுருவச் சிலையினை நிறுவி நாளை (26.11.2025) மாலை 5.00 மணியளவில் திறந்து வைக்கிறார்.

இவ்விழாவில், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், சீர்மிகு பெருமக்கள் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக - அரியலூர் மாவட்டத்தில்

# ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடங்களை திறந்து வைத்தார்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – கழக முன்னணியினர் பங்கேற்பு!

*அரியலூர், நவ. 25 -*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சென்னை, தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் உயர்கல்வித் துறையின் சார்பில் ரூ.15.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடங்களை திறந்து வைத்தார்.*

*ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற இக் காணொளிக்காட்சி விழாவின் நேரலை ஒளிப்பரப்பு நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் கலந்து கொண்டார்.*

*அதனைத் தொடர்ந்து, புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ள கல்லூரி கட்டடத்தில் குத்து விளக்கேற்றி வைத்து, மாணவ, மாணவியர்களிடம் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:-*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கிணங்க ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்கப்பட்டு ஜெயங்கொண்டம் அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளியில் இயங்கி வந்த இக்கல்லூரிக்கென கட்டடங்கள் கட்டுவதற்கு ரூ.15.60 கோடி மதிப்பில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டடங்கள் கட்டும் பணிகள் துவங்கப்பட்டு ஒன்றரை ஆண்டுகளில் பணிகள் முடிக்கப்பட்டு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.*

*அரசுப் பள்ளியில் கல்வி பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தினையும், மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தினையும் செயல்படுத்தியுள்ளார்கள். இதன் காரணமாக உயர்கல்வி வளர்ச்சியில் தமிழ்நாடு முக்கிய பங்கு வகிக்கிறது.*

*ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கின்ற மாணாக்கர்களின் எண்ணிக்கை 995 ஆகும். இவற்றில் 695 மாணாக்கர்களுக்கு புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப்புதல்வன் திட்டத்தின்கீழ் மாதந்தோறும் ரூ.1000 உதவித்தொகை கிடைக்கப்பெற்று பயன் பெறுகின்றனர்.*

*அதாவது 3ல் 2 பங்கு மாணாக்கர்கள் பயன்பெறுகிறார்கள் என்றால் நம்மை போன்ற கிராமப்புறங்களில் வாழக்கூடிய ஏழை, எளிய மக்கள் வாழுகின்ற பகுதியைச் சேர்ந்த மாணவச் செல்வங்கள் உயர்கல்வி பயில்வதற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றுகின்ற பெரும் பங்கு எவ்வளவு முக்கியத்துவம் என்பதை உணர்த்துகிறது.*

*முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மாணாக்கர்கள் அனைவரும் உயர்கல்வி பெறவேண்டும், அதன் மூலம் நல்லதொரு வேலை வாய்ப்பினை பெற வேண்டும் என்ற நோக்கத்தில் சிறப்பான திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மாணாக்கர்கள் அனைவரும் நல்லமுறையில் கல்வி பயின்று வாழ்வில் சிறப்பானதொரு முன்னேற்றம் பெறவேண்டும் என தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.*

*மேலும், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டத்தில் புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடம் ரூ.15,60 இலட்சம் மதிப்பீட்டில் கட்ட அரசாணை (நிலை) எண். 251 உயர்கல்வித் (டி1) துறை நாள்: 20.09.2023 மூலம் நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒப்புதல் வழங்கப்பட்டது. புதிய கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டடமானது தரைத்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கொண்டதாக அமைக்கப்பட்டு உள்ளது. ஒரு தளம் 17,258 சதுரஅடி, முதல் மற்றும் இரண்டாம் தள பரப்பளவில் மொத்தம் 51,389 சதுர அடி அளவில் கட்டப்பட்டு உள்ளது. இக்கல்லூரி கட்டடத்தில் 14 வகுப்பறைகள், 4 ஆய்வகங்கள், 2 கணினி ஆய்வகங்கள், கருத்தரங்கு கூடம், நூலகக்கூடம் சுகாதாரமையம், முதல்வர் அலுவலக அறை. துறைத் தலைவர்கள் அறை, பணியாளர்கள் அறை, உடற்கல்வி இயக்குநர் அறை, ஆவணப் பாதுகாப்பு அறை, மாணவர்கள் கழிப்பறை, மாணவிகள் கழிப்பறை, மாற்றுத் திறனாளிகள் கழிப்பறை, பார்வை மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகள். சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி மற்றும் தீயணைப்பு வசதிகளுடன் எழில்மிகு தோற்றத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு புறமும் சுற்றுச்சுவர் மற்றும் தேவையான அணுகுசாலை வசதிகளுடன் அமைக்கப்பட்டுடுள்ளது.*

*மேற்கண்ட கட்டடப் பணிகளானது 15.04.2024 அன்று துவங்கப்பட்டு தற்போது கட்டடத்தின் பணிகள்யாவும் முழுமையாக முடிக்கப்பட்டு துறைவசம் ஒப்படைக்கப்பட்டு, கல்லூரி மாணவர்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஆ.ரா. சிவராமன், ஜெயங்கொண்டம் நகர்மன்றத் தலைவர் சுமதி சிவக்குமார், தஞ்சாவூர் மண்டல கல்விக் கல்லூரி இணை இயக்குநர் குணசேகரன், ஜெயங்கொண்டம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் ம.இராசமூர்த்தி, ஜெயங்கொண்டம் நகர்மன்ற துணைத்தலைவர் கருணாநிதி, உதவி செயற்பொறியாளர்கள் கார்த்திகேயன், பாலமுருகன், உதவி பொறியாளர்கள் சதிஷ்குமார், கலைமதி, ஹென்றிசாம்செல்வின், கல்லூரி மாணவ, மாணவியர், கழக சட்டத்திட்ட திருத்தக் குழு இணைச் செயலாளர் சுபா.சந்திரசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் எம்.பி.பாலசுப்ரமணியன், மாவட்ட துணைச் செயலாளர் மு.கணேசன், மாவட்டப் பொருளாளர் இராஜேந்திரன், ஒன்றியப் பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. மணிமாறன், ரெங்க.முருகன், ஆர்.கலியபெருமாள், ஆர். செந்தில்குமார், மாவட்ட அணி அமைப்பாளர்கள் கே.சி.லூயிகதிரவன், எஸ். ஆர்.இராமராஜன், எம்.ஜி. இராஜேந்திரன், சு.வசந்த பகலவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.*



தமிழ்நாடு அரசின் சார்பில், உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் 105வது பிறந்த நாளையொட்டி, சென்னை அசோக் நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம்.நாசர், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ், (செய்தி) உயர் அலுவலர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.